சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 08.08.2025
பி.வா.சா.1 – தர்மலிங்கம் S/o மகாலிங்கம்(துணைவட்டாட்சியர், மேலூர்)
O.S No.26/2022 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

வழக்கு சொத்து சர்வே எண்.8/2A, சர்வே எண்.8/2C T.கோவில்பட்டி கிராமத்தில் உள்ள சொத்தானது தற்போது பஞ்சமர் தரிசாக இருக்கிறது. மேற்படி சொத்துக்கள் தொடர்பாக பஞ்சமர் தரிசு என்று குறிப்பிடுவதற்கு முன்னர் யார் பெயரில்பட்டா வழங்கப்பட்டிருந்தது என்றால் பட்டா எண்.531, நெருதான்அம்பலம் மகன் கலைச்செல்வன்(வாதி) பெயரில் பட்டா இருந்தது. கலைச்செல்வன் பெயரில் பட்டா ஏற்படுவதற்கு முன்னர் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் பட்டா எண்.231, சித்திரன் மனைவி பொட்டையம்மாள் என்பவர் பெயரில் பட்டா இருந்தது. பொதுவாக ஒரு பட்டா ரத்து செய்யப்படுவதற்க முன்னர் ஏற்கனவே பட்டா வைத்திருக்கும் நபருக்கு முறைப்படி அறிவிப்பு கொடுக்கப்பட்டு அவற்றை விசாரித்த பின்னரே பட்டா ரத்து செய்யப்படும் என்றால் சரிதான். அவ்வாறு மேலூர் வவட்டாரத்திற்கு உத்தரவின் பேரில் எத்தனை பட்டா நிலங்கள் பஞ்சமர் தரிசாக மாற்றப்பட்டது என்றால் 2548.41 ஏக்கர் நிலங்கள் பட்டா பஞ்சமர்தரிசாக மாற்றப்பட்டது. பி.சா.ஆ.7 ஆவணத்தில் மேலூர் வட்டத்தில் உள்ள கிராமங்கள் ஆதிதிராவிடர்களுக்க ஒப்படைவு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் 2572.37 ஏக்கர் நிலங்கள் பட்டியலில் கிராம வாரியாக 17.06.2011ம் தேதியிட்ட கடிதத்துடன் இணைத்து வரப்பெற்றுள்ளது என்றும், அவ்வாறு ஆதிதிராவிடர்களுக்கு பல இனங்களில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டு ஆதிதிராவிடர் அல்லாத பிற இனத்தவர்கள் அவர்கள் பெயரில் பட்டா பெற்று அனுபவித்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும்,அவ்வாறு ஆதிதிராவிடர்களுக்கு ஒப்படைவு வழங்கிய நிலங்களில் வேறு இனத்தவர் பெயர் மற்றும் முகவரியினை கண்டறிந்து நிலங்களை அனுபவித்து வரும்

நபர்களை விசாரணைக்கு ஆஜராக செய்து அவர்கள் தரப்பு ஆவணங்களையும் பெற்று அவர்கள் பெயரில் உள்ள பட்டாக்களை ரத்து செய்யவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தரப்பினர்களுக்கு விசாரணைக்கு அனுப்பட்டதற்கான ஆவணங்கள் அலுவலக கோப்பில் இல்லை. கோப்பின் அடிப்படையில் பார்வையிடும் போது எவ்வித விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்பதால் தான் தரப்பினர்களுக்கு விசாரணை தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் எங்களது தரப்பில் 1934ம் ஆண்டே பஞ்சமர் தரிசாக வழக்கு சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1934ம் ஆண்டு வழக்கு சொத்து பஞ்சமர் தரிசாக வகைப்படுத்தப்பட்டதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. பி.சா.ஆ-8 உத்தரவானது மாவட்ட ஆட்சியர் கூடுதல் நேர்முக உதவியாளர் அவர்கள் சசி என்ற பொன்னானை தொடர்பாக 11.05.2012 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளார். மேற்படி நபர் பொன்னானைக்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இருக்கிறதா என்றால் இல்லை. பி.சா.ஆ .9 ஆவணத்திலும் உரிய விசாரணை மேற்கொண்டு அதன்பிறகு தான் பட்டா ரத்து செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு தான் நாங்கள் பஞ்சமர் நிலங்களை கண்டறிந்து மேலுார், தாலுகா தொடர்பாக வட்டாட்சியர் மூலமாக நடவடிக்கை எடுத்துள்ளோம் இது தொடர்பான ஆவணத்தையும் தாக்கல் செய்திருக்கிறோம். முறைப்படி பட்டாதாரர்களுக்கு அறிவிப்பு கொடுக்காமல் சட்ட விரோதமாக அறிவிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பட்டாதாரர்களுக்கு இயற்கை நீதி தொடர்பாகவும் எங்களது சுற்றறிக்கையின் படியும் எவ்வித முன்னறிவிப்பும் கொடுக்காமல் விசாரணை மேற்கொள்ளப்படாமல் வழக்கு சொத்தை பஞ்சமர் தரிசாக மாற்றியது தவறு

என்றால் சரியல்ல. தற்போது வாதி வழக்கு சொத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். ஆகவே வாதி கோரியிருக்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.08 19:30:20 +0530

Sub Judge

Melur